


திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன்பணிசெய்து கிடப்பதே

சைவ சித்தாந்தப் பெருமன்றத் திங்களிதழ்

மலர் 76	திருவள்ளுவர் ஆண்டு 2034 தை – மாசி; பெப்ருவரி 2003	இதழ் 2

கடல்வரை ஓதம்மல்கு கழிகானல்பானல்
கமழ் காழி என்று கருதப்
படு பொருள் ஆறும் நாலும் உளதாக வைத்த
பதியான ஞான முனிவன்
இடுபறை ஒன்ற அத்தர் பியன் மேலிருந்து
இன் இசையால் உரைத்த பனுவல்
நடு இருள் ஆடும் எந்தை நனிபள்ளி உள்க
வினை கெடுதல் ஆணை நமதே.

திருஞானசம்பந்தர்

அவையே தானே ஆயிருவினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே

மெய்கண்டார்

வெளியீடு :

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

4 (முதல் மாடி), வேங்கடேச அக்கிரகாரம் சாலை,
மயிலை, சென்னை – 600 004. தொலைபேசி – 493 5109

பொதுப்பதிப்பாசிரியர் : பாம்பனார், வாரியார் அடிப்பொடி **செ.வே. சதாநந்தன்**
ஆசிரியர் : **முனைவர் வை. இரத்தினசபாபதி**
துணை ஆசிரியர் : **முனைவர் சா. சரவணன்**

பொருளடக்கம்

பெருமன்றத்தின் தேவார, சாத்திர, திருமந்திர இலவசப் பயிற்சி வகுப்புகள்

சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சார்பில் திருமுறைக் காவலர் சோமசுந்தரம் செட்டியார் நிறுவியுள்ள கட்டிடவாரியத்தின் ஆதரவில் இலவசமாக நடத்தப்பெறும் தேவார இசைப்பயிற்சி வகுப்புகள் :

1. சென்னை, சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில், வாரந்தோறும் சனி, ஞாயிறு காலை 9.30 மணி முதல் 11.00 மணி வரை. ஆசிரியர். அருள்மிகு கபாலீச்சுவரர் திருக்கோயில் ஓதுவார் திருக்களர் சிவத்திரு நாகநாத ஓதுவார்.

2. பூந்தமல்லி, பார்வையற்ற மகளிர் அரசு இல்லம் : வாரந்தோறும் சனி மாலை 3.00 முதல் 4.30 வரை, ஆசிரியர். புலவர் திரு. **கு. பாலசுந்தரம்.**

2. சென்னை, சைதாப்பேட்டை அன்னதானசமாசம் வித்தியாசாகர் நடுநிலைப்பள்ளி : வாரந்தோறும் இருமுறை. ஆசிரியை : **உ. வள்ளி**

3. வட சென்னை டாக்டர் குருசாமி முதலியார் தொ.து.வே. மேனிலைப் பள்ளி – வாரந்தோறும் இரண்டு வகுப்புகள். ஆசிரியை. **உ. வள்ளி.**

4. சென்னை, புரசைவாக்கம், கங்காதரீசுவரர் திருக்கோயிலில், வாரந்தோறும் இருமுறை; ஆசிரியர் சிவத்திரு. **எத்திராசு ஓதுவார்.**

திருமந்திரவகுப்பு : பெருமன்ற அலுவலகத்தில் வியாழக்கிழமை தோறும் மாலை 6.30 மணியளவில் **"திருமந்திரம்"** வகுப்பு நடைபெறும். ஆசிரியர் முனைவர் **வை. இரத்தினசபாபதி.**

சாத்திரவகுப்பு : பெருமன்ற அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை தோறும் மாலை 6.30 மணியளவில் **'சிவப்பிரகாசம்'** வகுப்பு நடைபெறும். ஆசிரியர் முனைவர் **வை. இரத்தினசபாபதி**

பெருமன்ற ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 100/–
பெருமன்ற ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 1000/–
(ஆண்டு உறுப்பினர் கட்டணம் என்பது சனவரி முதல் டிசம்பர் வரை)

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

"அந்நியம் இன்மையின் அரன்கழல்செலுமே"
"அயரா அன்பின் அரன் கழல் செலுமே"

ஆசிரியர் : முனைவர் வை. இரத்தினசபாபதி
துணை ஆசிரியர் : முனைவர் சா. சரவணன்

மலர் 76	பிப்ரவரி 2003	இதழ் 2

வாழ்வியல் வித்தகம்

(ஆசிரியர் உரை)

மக்களாய்ப் பிறந்தவர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். வரலாற்றைத் தன்னுள் கரைத்துக் கொண்டு தானே வரலாறாக நிற்பவர்கள் சிலர். வரலாற்றில் தன்னைக் கரைத்துக் கொள்பவர்கள் ஏராளம்; ஏராளம்.

வரலாற்றில் தான் கரையாமல், தன்னிடத்தில் வரலாற்றைக் கரைப்பவர்களே வாழ்வியல் வித்தகர்.

காந்தியடிகள் போன்றவர்கள் இந்திய சுதந்திர வரலாற்றைத் தன்னுள் கரைத்துக் கொண்டதால் வாழ்வியல் வித்தகர் ஆனார்கள். அப்போது இந்தியாவில் வாழ்ந்த எவ்வளவோ பேர் வரலாற்றில் கரைந்து போனார்கள்.

வாழ்வியல் வித்தகர் ஆக வேண்டுமா? இதோ ஓர் எளிய வழி.

வேலை, வேளை. இவை இரண்டும் தமிழ்ச் சொற்கள். வேலை என்றால் பணி; வேளை என்றால் காலம். வேலையில் வேளையை ஒடுக்கலாம். அது போலவே வேளையில் வேலையை ஒடுக்கலாம்.

முன்னவர்கள் வேலையைத் தொடங்கி விடுவார்கள். காலம் கரைந்து போய்க் கொண்டே இருக்கும். வேலை தொடங்கிய

இடத்திலேயே இருக்கும். இவர்கள் தான் உலகக் கலைச் சொல் அகராதியில் "சோம்பேறி" எனப்படுவார்கள்.

இரண்டாவது வகையைச் சார்ந்தவர்கள் வேளையில் வேலையை ஒடுக்குவார்கள். குறித்த வேலையைக் குறித்த காலத்தில் செய்து முடிப்பவர்கள். இவர்கள் முதலில் காலத்தைக் கணக்கிட்டறிவார்கள்; காலக் கணக்கர்கள். காலத்தில் வேலையை முடித்து விடுவார்கள். இவர்களே வாழ்வியல் வித்தகர்கள்.

முருகனுக்கு "வேளைக்காரன்" என்றொரு பெயர் உண்டு. அருணகிரிநாதர் திருவேளைக்காரன் வகுப்பு ஒன்று பாடியிருக்கிறார்.

ஆன்மாக்களை மனிதர்களாக ஆக்கி, பின்னர் அவர்களை அடியவர்களாக ஆக்கி, பின்னர் அவர்களைத் திருவடியிணைகளிற் சேர்த்துக் கொள்வது என்பது பணி. இதுதான் முருகனின் வேலை.

முருகன் அப்பணியைச் செய்தால் வேலைக்காரன் ஆகலாம்; வேளைக்காரன் ஆக முடியாது.

குறித்த பணியை – வேலையை, குறித்த காலத்தில் – வேளையில் செய்து முடிப்பதாகச் சூளுரைத்து வள்ளிநாயகியிடம் வேளம் புகுந்தவன் ஆதலால் முருகன் வேளைக்காரன் ஆனான்.

வேளையில் – காலத்தில், வேலையை – பணியை ஒடுக்கி வாழ வேண்டும் என்பதை விளக்க வந்ததே திருப்பள்ளியெழுச்சியின் மூன்றாம் பாடல்

"கூவின பூங்குயில்; கூவின கோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ! நற்செறி கழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே!
யாவரும் அறிவரியாய்! எமக்கு எளியாய்
எம் பெருமான் பள்ளி எழுந்தருளாயே"

வேளையில் வேலை ஒருப்படுகின்றது; உள்ளடங்குகிறது. ஒளிவந்தது; குயில்கள் கூவின; அதன்பின் கோழியின் வேலையாகிய

கூவுதல் ஒருப்பட்டது. நட்சத்திரங்களின் ஒளி சூரிய உதய வேளையில் ஒருப்படுகின்றது. ஒலி ஒளி ஆகிய எல்லாம் காலத்தின் செயற்பாட்டில் தம்மை ஒடுக்கிக் கொள்கின்றன. இந்த உலகியல் எதனை உணர்த்துகின்றது?

இறைவா! நாங்களும் ஒருப்படுதல் வேண்டும். தேவா! நின்கழல்களையும் திருவடிகளையும் காட்டுவதற்காகப் பள்ளி எழுந்தருளுக. அருமையுடையவனே! எமக்கு எளியவனே! பள்ளி எழுந்தருளுக: காலத்தில் கண் திறக்க என வேண்டுவதே பணி.

வாழ்வியல் வித்தகம் பெற, வேளையில் வேலையை ஒடுக்க வேண்டும் என்பதே இப்பாடலின் உட்கோள்.

தாரகை ஒளி, உதயத்து ஒளி, தேவ ஒளி என்ற மூன்றும் ஒளிநிலைகளைக் குறிக்கும் சொற்களே.

'தேவ' என்ற சொல் அருள் ஒளியைக் குறிக்க வந்தது.

மூன்று ஒளிகளையும் முறையே எடுத்துக் காட்டிய மணிவாசகப் பெருந்தகை ஒன்றோடு ஒன்று ஒருப்பட்டு நிற்பதை எடுத்துக் காட்டி, அதன் மூலம் ஒரு மெய்ப் பொருளுண்மையை எடுத்துக் காட்டினார்.

தாரகை ஒளி, உதயத்து ஒளி, தேவ ஒளி என்ற மூன்றும் ஒன்று தோன்றும்போது மற்றது இல்லாமற் போதல் இல்லை. ஒன்று ஒன்றுடன் இணைந்து நின்றே தத்தம் பணிகளைச் செய்கின்றன.

ஓவின தாரகை ஒளி – ஒழிவின்றிப் பரந்து நின்ற விண்மீன்களின் ஒளி.

இருள் மிக்கிருந்த காலத்தில் ஒழிவின்றிப் பரந்து நின்ற விண்மீன்களின் ஒளியானது தெளிவாகத் தெரிந்தது.

பின்னர், சூரிய உதய ஒளி வந்தது. அதனுள் தாரகை ஒளி ஒருப்பட்டு இணைந்து நின்றது.

இரண்டும் ஒன்றை ஒன்று இல்லாமற் செய்யவில்லை. உதய ஒளியும் தாரகை ஒளியும் ஒருமைப் பட்டு நிற்கின்றன. தத்தம் பணிகளைச் செய்கின்றன.

இறைவனின் அருள் ஒளியும் இவ்விரண்டுடன் இணைந்து ஒருமைப்பட்டு நிற்கின்றது.

மாயையால் ஆக்கப் பெற்ற உடம்பின் ஒளி, ஆன்மாவின் ஒளி, அருள் ஒளி என நின்ற இம் மூன்று ஒளிகளும் ஒன்று ஒன்றை அழிக்காமல் இணைந்து ஒருமைப்பட்டு நின்று தத்தம் பணிகளைச் செய்கின்றன என்று கூறி விளக்கும் மணிவாசகம் உணர்ந்து இன்புறத் தக்கது.

திருவாசகத்தின் உட்கிடையாக அமைந்துள்ள 'அருமையும் எளிமையும்' என்ற கருத்தை இப்பாடலிலும் விளக்குகின்றார்.

யாவராலும் அறியப்பெற இயலாதவன்; ஆயினும் எமக்கு எளிமையுடையவன் என்றார்.

ஒன்றில் ஒன்று ஒருப்படுதல் என்ற தத்துவத்தை – வேளையில் வேலையை ஒடுக்கி ஒருமைப்படுத்த வேண்டும் என்ற செயல் விளக்கத்தை எடுத்துக்காட்டி வாழ்வியல் வித்தகம் பெற வேண்டும் என்பதே இப்பாடலின் உட்கோள்.

இதை இங்கே இப்போது குறிப்பிடுவதன் நோக்கம் என்ன ? காலம், பணி, ஒருமைப்பாடு என்ற மூன்றையும் உணர்ந்தால் மட்டும் போதாது. இங்கே குறிப்பிடப் பெற்ற ஞானம் எல்லாருக்கும் இருக்கும். அவர்களெல்லாம் அவ்வகையில் ஞானிகளே. இவைகளை உணராமலேயே செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களும் உண்டு. இவ்விருவரும் தனித்தனி நிற்றலால் பயன் பெரிதும் விளையாது. இருவரும் ஒருவரோடு ஒருவர் ஒருமைப்பட்டு நின்று – இணைந்து நின்று செயற்படுதல் வேண்டும். ஞானிகளும் செயன்மைப் பாட்டாளர்களும் ஒருவரோடு ஒருவர் இணைந்து நின்றால் மட்டும் போதாது. ஒருவருள் ஒருவர் என ஒருமைப்பட்டு நின்று செயலாற்றுதல் வேண்டும். அத்தகைய ஒருமைப்பாட்டினால் விளையும் பயன் தனிமனிதனுக்கு மட்டுமேயன்றி, சமுதாயத்துக்கும் பெரும்பயன் விளைப்பது என்பதை உணர்ந்து செயற்பட்டு ஒருமைப்பட வேண்டுவது நம் கடமை.

சமரசம்

அமரர் திரு. ஜே.எம். நல்ல சாமிப்பிள்ளை

மலர் 1 – இதழ் 11 – 1928 நவம்பர்

சமரசம் என்னும் சொற்றொடர் சமம், ரசம் என்று பிரிகின்றது. சமம் என்ற பதம் ஒற்றுமை, 'ஒப்பு' என்று பொருள்படினும், இன்னொரு பொருளும் அதற்குண்டு. அதாவது பட்சபாதமின்மை (Impartiality) – மாக்டானல் சமஸ்கிருத அகராதியைப் பார்க்க. சமதிருஷ்டி, சமதர்ஸனம் என்பதும் அதுவே. பலவற்றின்மேலும், விருப்பு வெறுப்பு மேம்படாமல், உள்ளதை உள்ளபடி யறிதல் என்பதுதான் அதன் கருத்தாகின்றது. 'இருவினை யொப்பு' (கர்மசாம்யம்) என்னும் சொற்றொடரில், ஒப்பு என்ற பதமும், சமம் என்னும் பதத்தின் மொழிபெயர்ப்பேயாகி, சாதாரணமாக, ஒற்றுமை யாதல் ஒத்தல் எனப் பொருள் விளக்கினும், அது உண்மையாகாது, விருப்பு வெறுப்பின்றிப் பார்த்தல் என்னும் பொருளே சிறந்தமை காண்க. எப்படி யெனின், இருவினையொப்பு உண்டாதல், ஒருவன் செய்த புண்ணியமும் பாவமும், இரண்டு தட்டில் வைத்து நிறுத்தால், எப்பொழுது நிறை சரியாகுமோ, அப்பொழுதே உண்டாகுமென்கிறார்கள். இது சரியான கருத்தன்று. இரண்டு தட்டிலும் பொருள் நிறைய வைக்க எவ்விதம் நடுமுள்ளானது இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் சாயாது நடுவில் நிற்குமோ அவ்விதமே, ஒருவன் மனம், நல்வினையில் (தனக்கு இன்பம் தருவதில்) விருப்பும், தீவினையில் (தனக்குத் துன்பம் தருவதில்) வெறுப்பும் உண்டாகாதபடி, நடுவாக நிற்றலே கர்மசாம்ய மடைதலாம். இவ்வொப்பின்மையும், உண்மையுமே யன்றோ பசுவுக்கும் பதிக்கு முள்ள தாரதம்யம்.

"வேண்டுதல் வேண்டா மையிலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டு மிடும்பை யில"

இவ்வுண்மையு மன்றோ திருப்பாற்கடல் கடைந்த இதிகாசத்திலும் காணப்படுகின்றது. தேவர்கள் முதலாகிய சகலர்கள் தாங்கள் அடைந்திருந்த வறுமையின்மேல் வெறுப்புற்று, அமிர்த முதலிய பொருள்மேல் விருப்புற்று மேல்வினையைச் செய்ததில் சகல பிராணிகளுக்கும் அதனால் உண்டாகிய இம்சையின் பயனாகிய

விஷம் பிறந்து அதன் மேலும் வெறுப்புற்று வருந்தினார்கள். இதுவரையும், இறைவன் அச்சகலர்களின் கூட்டத்திற் கலவாது வறுமையினாலும் வருந்தாது, (அவன் என்றும் பிட்சாடனன்) பொருளையும் விரும்பாது நின்று, விஷத்தினால் பீடிக்கப்பட்ட தேவாதிகள் அலறி முதல்வனை நோக்கி ஓலமிட அவர்களுக்கு இரங்கி, அவ்விஷத்தையுமே தான் அமுதாக்கிக் கொண்டனன்.

ஆகவே, சமம் என்ற பதத்துக்கு, ஒற்றுமை யென்னும் பொருளைவிட, அபிமானத் தழுந்தாது, உள்ளதை உள்ளபடி உணர்ந்து அதன் உண்மையையறிதல் என்னும் பொருள் சிறக்கின்றது. அது சமரசம் என்னும் சொற்றொடரையே உய்த்துணரில் இன்னும் நன்றாய் விளங்குகிறது. எப்படியெனில், ரசம் என்பது நாவினால் அறியக்கூடிய சுவையாகி, பல பொருள்களின் சுவை, கார சாரமென்பதாம். அச்சுவையுமே ஆறுவகையா யுள்ளது. ஆறுசுவையுமே ஒன்றெனின் அது ஒருபோதும் ஒவ்வாது. அப்பொழுது ஆறென்ற பிரிவும் ஏற்படவேண்டிய தில்லை. கருப்பஞ்சாற்றை விரும்பி யேற்றவன் வேப்பஞ்சாற்றையும் மகிழ்ந்து குடிக்கவேண்டும். ஒரேவிதப் பழச்சாற்றின் ஒப்புமை சொல்வதிலும் விசேஷ மில்லை. பேதமில்லாத பட்சம், அபேதம் சாதித்தல் அசம்பாவிதமாகும். பேதங்கண்ட விடமே, ஓர் வித சொரூப ஒற்றுமை பற்றி அபேதம் சொன்னால் அதில் சிறப்புண்டு. அணியிலக்கணத்திலும், இவ்வுண்மையை உய்த்துணர்க. ஆகவே சமரசம் என்றதனால், எல்லாப் பழத்தின் சாரமும் ஒன்றாகா. ஒரேவித சாதிப்பழங்களின் சாரமும் ஒன்றெனல் பொருள் சிறக்கா அபேதமில்லாத விடத்து. ஆயின், சாரங்கள் வேறுபடினும், ஒரே சுவையில்லாவிடத்தும், ஒவ்வொரு பழத்தின் ரசமும் ஒவ்வொரு முக்ய உபகார குணமுள்ளது யாவர்க்கும் கைவந்தது. கருப்பஞ்சாறானது மிகவும் இனிக்கினும், சுரநோயுள்ளானுக்கு அது குணத்தைச் செய்யாது கெடுதலையே விளைவிக்கும். அப்பொழுது, வேப்பஞ் சாறானது கசக்கினும் குணத்தைக் கொடுக்கும். (வேப்பஞ்சாறும் குயினாவும் ஒரே குணமுள்ளன). கர்ப்பிணிக்கு மதுரமான பதார்த்தத்தில் வெறுப்பும், புளிப்பில் விருப்பும் உண்டாகின்றது. ஆகவே சாரங்கள் வேறுபடினும், அதனை நோக்காது, ஒன்றை விரும்பியும், ஒன்றை வெறுக்கவும் செய்யாது, அதன் உண்மைக்குண

விசேஷத்தைக் கைக்கொண்டு சமயத்துக்குத் தக்கபடி அதனைப் பிரயோகப் படுத்துவதே அதன் சமரசத்துவ மாகும். இச்சமரசத்தை மதங்களில் ஏற்றிக் கூறுமிடத்தும், இவ்விதமான பொருள் ஒற்றுமை மிகவும் சிறக்கின்றது. எல்லா மதங்களும் ஒன்றாகா. தெய்வமில்லை என்கிற மதமும் சீவனில்லை யென்கிற மதமும், இவையிரண்டு முள்ளன என்று கொள்ளும் மதங்களும் ஒன்றாகா. இவ்விதமாகவே புறப்புறச் சமயங்கள், புறச்சமயங்கள், அகப்புறச் சமயங்கள், அகச்சமயங்கள் என்று எண்ணப்பட்டவைகள் ஒன்றோ டொன்று ஒன்றாகா. ஆயின் இச்சமயங்களிலும் ஒவ்வொரு உண்மை கிடக்கின்றது. ஒவ்வொன்றும் ஆன்மாக்களுக்கு ஒவ்வொரு பிரயோசனத்தை உண்டாக்கியே நிற்கின்றது. அவ்வவர்களுக்கும் ஒன்று பயன்படுவது போல், மற்றையது பயன்படாது. அந்நிலையிலிருந்து அப்பொருளை யுணர்ந்து அப்பயனையடைந்து பரிபக்குவப்பட்ட காலத்தில், அதன் மேல்நிலையிலிருக்கும் பொருளைக் காணின், அதன்மேல் அவாவுறும். இதனானே எல்லாச் சமயங்களும் இறைவனால் ஆக்கப்பட்டதென்றும், அதன் ஆணை வழி நிற்கின்றதென்றும் சொல்வது எல்லாச் சமயங்களையும் சோபான மார்க்கங்களாகக் கொண்டதும் இக்கருத்தைப்பற்றியே யென்பதாம். 'இது வாகு மதுவல்லவெனும் பிணக்கதின்றி' என்றதின் உண்மையும் இதுவாகும். "நீதியினால் இவையெல்லா மோரி டத்தே காண்பது" ஒப்பற்ற ஒரு சமயத்தில் காணக்கிடக்குமே யல்லாமல், சமயகோடிகளில், ஒவ்வொருவரும் தங்களுடன் மற்றவர்களைச் சமப்படுத்தார்கள். ஒன்றுபடார்கள். 'நீதியினால்' என்றதின், விசேடம் மிகவும் கவனிக்கற் பாலது. இச்சமரசம், விளக்கெண்ணெய், வெண்டைக்காய், சேப்பங்கிழங்கு முதலாயின சேர்த்துச்செய்யுங் குழகறி போல்வ தொன்றன்று. அல்லது (ஒருவர் சொல்கிறார்) புத்தர்கள் விஞ்ஞானம் என்ற பொருளை அங்கீகரிக்கிறார்கள், உபநிடதங்களில், விஞ்ஞானம் என்ற ஒரு பொருள் பிரஸ்தாபிக்கப் படுகின்றது. அதற்கு ஆத்மா என்ற பொருளும் காணப்படுகின்றது, ஆகையால் புத்தர்களும் பிரம்ம வாதிகளன்றோ என்பது. இதுவும் சமரசமாகாது. ஏனெனில், இந்த விஞ்ஞானமும் இல்லாத மாயையினின்றும் உண்டாகியது. உபநிடதங்களில் விஞ்ஞானம் என்றதற்கு இரண்டு பொருள் உண்டு.

மாயையினின்றும் உண்டாகிய புத்தி என்றும் அதற்கு அதிகமாகிய ஆன்மா (சீவான்மா – பரமான்மாவன்று) என்றும் சமயப் பிரயோகங்களை நோக்கியே, இவ்விரண்டில் ஒரு பொருளைக் கொள்ள வேண்டி யிருக்கின்றது. ஆகவே, எல்லாச் சமயங்களையும் சமரசபாவனை செய்ய வேண்டுவதென்பது, நீதியினால், ஆகவேண்டுமே தவிர அவரவர் நினைத்த படியுமாகாது.

மேல், நம்மான்றோர், வேதாந்த சித்தாந்த சமரசத்தையே மிகவும் போற்றியதென்னை எனின், அதன் கருத்தை விசாரிப்பாம். இதில் வேதமென்பது இருக்கு, யஜூர், சாமம், அதர்வணம் என நால் வகைப்பட்டு, ஒவ்வொன்றும் சம்மிதை, பிராம்மணம் என இருவகைப் படும். சம்மிதை மந்திர ரூபமாகப் பெரும்பாலும் பல தேவதைகளின் ஸ்தோத்திரமாகி அக்னிஷ்டோமாதி யாகங்களில் பிரயோகிக்கப்படும். பிராம்மணத்தில் இப்பிரயோகங்களையும், யாகஞ்செய்ய வேண்டிய விதிகளையும் கூறுவதுடன், ஆரணியபாகம் என்று சொல்லப் பட்டதில், சில புராண சரித்திரங்களும், ஹிதோபதேசங்களும் உபநிட தங்களும் காணப்படுகின்றன. மந்திர பாகங்களில், அறம் பொருள் இன்பத்தை வேண்டிய பாகம் அதிகமாகவும், வீட்டு விஷயத்தைக் குறித்தது மிகவும் குறைவாகவும் காணப்படுகிறது. உதாரணமாக, இருக்கில், 'இருபட்சிகள் ஒரே மரத்தில் வசிக்கின்றது' என்றதும், "ஒன்றே சத் உள்ளது அதனை விப்பிரர்கள் வெகு விதமாய்ச் சொல்லுகிறார்கள்" என்றதும் 'நாச தசத்' சூக்தமும், இன்னு மிரண்டொன்றுமே முக்யமாய்க் காணப்படுகின்றது. இந்திரன் அக்னி வாயு முதலான தேவர்களை வரிக்கும் மந்திரங்கள் அநேகமாகவும், ருத்ரன் விஷ்ணுவைக் குறிக்கும் மந்திரங்கள் கொஞ்ச மாகவும் காணப்படுகின்றன. யஜுர் வேதத்தில், சதருத்ரியம் என்னப்பட்ட பாகமே முக்ய பாகம். இதன் மத்தியில் நமசிவாய: என்னும் பஞ்சாட்சர மந்திரம் படிக்கப்படுகிறது. இந்த சதருத்ரியந் தான் புராண இதிகாசங்களில் எல்லாம் விதந்து எடுத்து ஓதப்படுகிறது. ஆயினும், இருக்கிலேயே ருத்ரனைச் சிவமாகவும், யக்ஞங்களுக்கு அதிபதியாயும், அதன் பலனைத் தருபவனாகவும், சுதந்தரமுள்ள வனாகவும் பரமயோகியாகவும் காட்டப்படுகின்றது. நித்திய யஜூர்வேதத்தில் இதனையே மிகவும் விளக்கி யிருக்கின்றது.

மேற்சொன்ன உப நிடதங்களே வேதாந்தம் என்றும், வேதசிரசு என்றும் கூறப்படும். இது முக்யமாய் ஞானபாகத்தை யெடுத்து ஓதும். இது பதிபசுபாசங்களின் உண்மைகளையும், பாசநீக்கத்திற் காகவேண்டிய வித்தைகளை (உபாசனைகளை)யும் கூறும். யஞ்ஞாதிகளைச் செய்வதினால் அடையும் பலன் நித்திய மல்லவென்று அவற்றை யொதுக்கியும் தள்ளும். சிவாகமங்கள் 28–ஆக எண்ணப்பட்டு மேற்படி விஷயங்களை விரித்து, மோக்ஷலாப மடையவேண்டி மட்டும் உபாசனைகளுக்காக அநுகரணமான மந்திர தந்திரங்களைச் சொல்லும். இக்கிரியைகளில் உபயோகப்படும் மந்திரங்கள், அதனைச் செய்யும் முறைகளும் வேதமந்திரமும், பிராமணங்களில் கண்டதுமேயாம். ஆயின், உபயோகப்படுத்து முறை வேறு. வேதத்தின்படி அம்மந்திரங்கள் முதலானவை அறம்பொருள் இன்பமடைதற்கு வேண்டிய யாகாதிகள் சம்பந்தமாகும். சிவாகம விதிப்படி அவைகளை யெல்லாம் ஞானபரமாக்கி உபயோகப் படுத்துகிறார்கள். உதாரணமாக, யாகாதிகளில், ஆடு முதலிய பிராணிகளைக் கொன்று பலியிட்டு அக்கினியில் தகிக்கின்றார்கள். மேற்கூறிய பலனைவிரும்பி, ஆகமவிதிப்படி, பலியென்றால், பிராணிகளைக் கொல்வதன்று. ஒவ்வொரு சீவனின் அகங்காரமாகிய தற்போதத்தை, பசுத்துவத்தை, ஞானாக்கினியில் தகிப்பதே உறுதியான பலியென்பதாம். இப்பசுத்வம் கழலவும், பதித்தவம் கிடைக்கும். நந்தனார் சரித்திரத்தின் உண்மையுமிதுவே. மல சம்பந்திகளா யிருக்கும்வரையும் நாம் மாலர்கள் (பஞ்சமர்கள்). மலம் தகிதமானவுடன் பண்டிதன் (பிராமணன்) ஆகின்றான்.

"பாசம்தகதிபண்டத்த." இந்தப் பிராம்மண பதமே நந்தி பதம், சிவபதம். இவ்விதமான தாரதம்யம் வேதங்களுக்கும் ஆகமங்களுக்கும் உள்ளதைக் கவனிக்க வேண்டும். ஆனால், அவை வேதத்தில் சூட்சமமாகக் கிடக்கின்றது. தான் அதனாலே வேதம் பொதுவென்றும் சூத்திரரூப மென்றும் ஆகமங்கள் சிறப்பென்றும் பாடியம் போன்றதென்றும் சொல்லுகிறது. மேலும் இன்னொன்று. இவ்விரண்டு முதல் நூல்களிலும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு பாதங்களும் பிரஸ்தாபிக்கப்படினும், உபநிடதங்கள் யோக பாதத்தையே அதிகமாக எடுத்துப் பேசுகின்றன. உபநிடதங்கள் முடிகின்ற

பாகமெல்லாம் தத்வமசி முதலிய சிவோகம் பாவனையே எடுத்துச் சொல்லி நிறுத்தும். உபநிடதம் என்ற பதமும் யோகம் என்ற பதமும் ஒரே பொருளன. உபநிஷத்–உப+நி+சத். உப=நெருங்கவும், நி=உபசர்க்கம் மிகுதியை யுணர்த்தும்; சத=அழிதல். அதாவது ஒன்று மற்றொன்றை நெருங்கவும் நெருங்கவும் ஒன்று அழிகின்றது என்று பொருள். யோகம் என்றது நெருக்கம், ஒன்றாதல் என்பது பொருள். இந்நெருக்கத்தில், ஒன்று கெட்டாலும், வீட்டின் பயன் இல்லை. ஒன்று அழியா திருந்தாலு மோட்ச மடைதலும் கூடாது. ஆக, உளன் முதல் நான் என்றது வரை முற்றிலும் அழிந்து ஆன்மா சிவத்தோடு கலந்து அதுவது வாய்ச் சிவமாகி நிற்றல் என்பது உண்மையாகும்.

"சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து
தேய்ந்து ஒன்றாம்"

"வான்கெட்டு மாருத மாய்ந்து"

"நான் கெட்ட வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ"

"நான்கெட்டு சிவமான வாபாடித்
தெள்ளேணம் கொட்டாமோ"

என்று திராவிட மெழுது மறை மொழிகளைக் கவனித்தால் பொருள் இனிது விளங்கும். மேலும், உபநிடதம் என்ற பதம், சாந்தோக்யம் (11–10)ல் உபயோகிக்கப்பட்டு யோகம் என்று ஸ்ரீ சங்கரராலும் அர்த்தம் செய்யப் பட்டிருக்கின்றது. ஆக இவ்வேதாந்த நிலை யோக பாதத்தில் நிற்கும். இந்நிலையினின்றுமே ஞான பாதத்தில் இறங்கும். மேல் நாம் ஆறாறு தத்வங்களையும் முத்தியேணியாகச் செல்ல வேண்டியிருப்பதால், இதில் இளைப்பாறுவதற்காக ஆங்காங்குச் சில தட்டுகள், தானங்கள், நிலைகள், பதங்கள், ஏற்பட்டுள்ளன. அதில் நிலைத்து இளைப்பாறியபின்தான் மேல் தட்டை நோக்கிப் படிகள் மீது கால் வைக்க வேண்டும். இம்முறையில் பொதுவாக ஆத்மதத்துவம் முடிகிற வரையில் ஒரு தட்டு; வித்யாதத்வ முடிகிறவரையில் ஒரு தட்டு; அதற்குமேலுள்ள சிவ தத்துவங்களிலும் ஒவ்வொரு தட்டு. ஆகவும், உபநிடதங்களில் அநேகமாக, ஆத்மதத்வம் வரையும் ஏறியும், சிலவற்றில், வித்யாதத்வம் வரையுமே ஏறியும், ஒன்றின்மட்டுமே,

சிவதத்வத்தைப் பற்றிக் குறித்து மிருக்கின்றது. ஆக மங்களின்மட்டுமே 36 தத்துவங்களைப் பூராக விவகரித்து எல்லாத் தத்வங்களும் எல்லாக் கலைகளும், நாதமும் நாதாந்தமும் தாண்டிய பதமே, முத்திப் பதமென்று கூறுகின்றது. இவ்விதமாக நாம் விசாரிக்கின்ற காலத்து, வேதம் வேதாந்தமும், ஆகமம் ஆக மாந்தமும் நமக்கு ஒரே இறைவனால் அளிக்கப்பட்டு, பலவேறு பரிபாகமுள்ள ஆன்மாக்கள் அறிந்த வண்ணம் பயன் அடையுமாறும், முடிவில் எல்லாம் ஒரே உண்மைக் கருத்தை யுடையதாகவும் காண்கின்றோம். ஆகையால் இவையிரண்டும் ஒன்றே. இரண்டும் பிரமாணமே. மூல நூல்களில் வித்தியாச மில்லை. ஆனால் ஒன்றோடொன் றொவ்வாமல் சமயங்கள் ஏற்பட்ட வித மெங்ஙன மெனில், ஆன்மாக்கள் பரி பக்குவத்துக்கு அநுகுணமாகப் படிகளும், நெறி நிலைகளும், கடைசியில் ஒரே துறையும் ஏற்பட்டிருப்பதால் அவ் வான்மாக்கள் சிற்சில படிகளிலும், நெறி நிலைகளிலும் இருந்தவாறே தடித்து நின்று அந்நிலையை உண்மை நிலையென்று நம்பி அதற்காக அம்முதல் நூல்களினின்றும் விரித்துத் தங்கள் மார்க்கத்தையே விளக்குவதாக அநுமானாதி யொப்ப விரித்துரைத்து வேறு நூல்களும் செய்திருக்கிறார்கள். இவ்விதம் பார்க்குமளவில், முற்கூறிய புறப்புறச் சமயமுதல் அகச்சமயம்வரை விரிந்த விவரம் புலப்படுகிறது. இவைகளில் புறப்புறம், புறச் சமயங்கள் வேதத்தை யொட்டாமலும் ஒட்டியும் நின்ற மார்க்கங்கள். மற்றச் சமயங்கள் வேதத்தையும் ஆகமத்தையும் ஒட்டி நின்றவைகள். இவைகளில் சிவாத்துவித சைவமானது சித்தாந்த சைவத்துக்கு மிகவும் நெருங்கிநிற்பது ஒன்று. அந்நெருக்கத்தினாலேயே அவ்விரண்டிற்கும் அபேதம் சொல்வதுண்டு. ஆயின் அவை யிரண்டிற்கும் பேத முண்டு. பேதமில்லாத வழி அபேதம் சாதித்தலும் அசங்கிதமென்று முன்னமே குறிப்பிட்டிருக்கின்றாம். சிவாத்துவித சைவம் நிமித்தகாரண பரிணாம வாதமாகும். சிற்சத்திக்கும் சுத்த மாயைக்கும் வித்தியாசம் பாராட்டாது 36 தத்துவங்களுக்குட் பட்ட நிலையில் நிற்பது. ஸ்ரீ நீலகண்ட சிவாசாரியாரும், ஸ்ரீமத் அப்பையதீக்ஷித சுவாமிகளும், வீரசைவாசாரியர்களும் இந்நிலையில் நின்றவர்கள். சத்திவிஷயமாக இவ்விதமா யிவர்களுக்கும் சித்தாந்த சைவர்களுக்கும் பேதமுளதேனும், மற்றெல்லா விஷயங்களிலும் ஒற்றுமை யுண்டு. அதுவு

முக்கியமாக ஆன்மாவும், இறைவனும் வேறு வேறு பொருள்கள் என்பதில் மிகவும் திட சித்தமுடையவர்கள். இது ஒன்று முக்கியமாகக் கைக்கொள்ளவும், மற்றுள்ள வித்யாசங்கள் அவ்வளவு பெரிதாகத் தோற்றா. சித்தாந்த சைவர்களும், மாயைதனுவிளக்காகக் கொண்டு, இறைவனால் உபகரிக்கப்படும் பரிக்கிரக சத்தியாகச் சொல்லுகிறார்கள். ஆயின் இப்பரிக்கிரகசத்தியே, இறைவனுடைய அபின்னசக்தியா யிருந்தாலும் அதனால் விளையும் தீமை ஒன்று மில்லையென்க. ஆயின், பதிபசுக்களின் அபேதம் சொல்லுவதினால் விளையும் தீங்கு இவ்வளவென்று எண்ண வொணாது. ஆதலாற்றான் சிவாத்துவித சைவத்துக்கும் சித்தாந்த சைவத்துக்கும் அபேதம் பாராட்டுவது. மேலும், யோக மென்பது சரியை முதல் சிவாத்துவித சைவம் வரை ஓடி நிற்குமானாலும், சிவாத்துவித சைவத்தைச் சிறப்பாக நின்றுணர்த்தும். ஞான மென்பதும் சரியை முதல் சுட்டிறந்து நின்ற நிலையாகிய உண்மைமுக்தி நிலையினையும் அதின் அனுபவப் பேறாகிய நிஷ்கள சிவத்தையும் குறிப்பிக்கினும், சிறப்பு வகையில், சிவத்தோடு கலந்து இரண்டற நின்ற நிலையினையே உணர்த்தும். இது போலவே வேதாந்தமும் சித்தாந்தமும் என்க. ஆகவே, யோகாந்தம், போதாந்தம், கலாந்தம், நாதாந்தம் என்பன கொஞ்சம் கொஞ்சம் பேதப்படினும் இவை யெல்லாம் சிவாத்துவிதமாகிய வேதாந்தத்தில் அடங்கும். தனி ஞானமானது சித்தாந்தத்தையே குறிக்கும். இதனால் நம் அருள்மொழித் தேவர் தம் "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்ற திருவாக்கும் விளங்கினமை காண்க. இக்கருத்தைத்தான், "தானான வேதாந்தம் தான் என்னும் சித்தாந்தம்" என்னும் திருமந்திரத்துக்கும் பொருளாக மதிக்கின்றாம். பின்வரும் அடிகளை யோசிக்கும் காலையும் அதன் கருத்து அவ்வாறே யிருக்க வேண்டுமென்பது தெரிகிறது.

"தானான வேதாந்தம் தான் என்னும் சித்தாந்த
மானா துரியத்து அணுவன் தனைக்கண்டு
தேனார் பராபரஞ் சேர்சிவ யோகமாய்
ஆனாமலமற் றருஞ்சித்தி யாதலே."

தான் என்னும் பதம் முப்பாலினும் மூவிடங்களிலும் வரும். ஆகவே சீவன் பரன் என இரண்டு பொருளிலும் வரும். "தானலா

துலக மில்லை சகமலா தடிமையில்லை தானலாற் றுணையு மில்லை" என்ற மறைமொழிகள் விளக்கும்.

"யானாகிய என்னை விழுங்கிவெறுந்
தானாகி நின்றது தற்பரமே"

என்ற அனுபூதிச் சொல் இன்னும் விளக்கும். ஆகவே திருமந்திரத்தின் பொருள் : நான்தான் (சிவம்) ஆன என்னும் சிவோகம் பாவனையாகிய யோக நிலையில் நிற்பது வேதாந்தம். தான் (சிவம்) ஒன்றே என்றும் வேறொன்றும் திரிஸ்யமில்லை என்றும் ஆன்மா சிவா நந்தத்தில் அழுந்தி நிற்கும் ஞானநிலையதாகியது சித்தாந்தம். அதனை விரித்துரைக்குங்கால், ஆத்ம தரிசனமடைந்து அவ்வாத்மாவில் சிவத்தைக் காண்கை சிவயோகமாகிய வேதாந்தம். ஆணவம் முற்றும் கழன்று யாரானும் பெறுதற்கரிய சித்தியடைதல் சித்தாந்தம். இவ்விதம் பொருள் கூறுதல், ஆன்மா ஒன்று உண்டு என்று சொல்லுகிற மார்க்கம் சித்தாந்தம் என்பதை விட, எம் சிற்றறிவிற்குச் சிறப்பாகக் காண்கின்றது. நிரீசுவர சாங்கியமுதல், ஆத்மா உண்டு என்று சொல்லுகிற மார்க்கங்கள் அநேக முளவாமாதலால், இதற்கு அடுத்த திருமந்திரத்திலும் நாம் விளக்கிய பொருளை வற்புறுத்து வதற்காகவே, "அத்தன்பா லன்பால் அடைதல் சித்தாந்தமே" என இறுதி நிலையினையே சித்தாந்தமாகவும் கட்டளையிட்டிருக்கின்றார். சமாதியென்பதும் யோகத்தின் முதிர்ச்சியே யானதால் அதனையே நான்தான் ஆகும் அல்லது தான் அவன் ஆகும் சமாதி யென்றும் கூறி, வேதாந்தம் யோகமார்க்க மென்றே தெளிவுறுத்தார். இவ்விதமான சமாதி கைகூடினால், மற்றெல்லா நிலைகளும் அடைந்தபடி யென்றும் அத்திருமந்திரத்தில் கூறியுள்ளார். ஆறந்தமாகக் கூறியதும் பொதுவாக, சித்தாந்தத்தை யொழிந்த மற்ற நாலந்தங்களும் வேதாந்தத்தில் அடங்குமெனத் தோற்றுகின்றது. போதாந்தத்தை வேதபோதாந்த மென்று உமாபதி சிவமும் கூறியது சான்றா மென்க.

இதுநிற்க, நாம் மேல் முதல் நூல்களை யநுசரித்துப் பலரும் அநேக நூல்களியற்றி யுள்ளதாகச் சொன்னோம். அவற்றில், சாரீரகமீமாம்சா சூத்திரமென்று ஒன்று பாதராயண ரென்பவரால்

செய்யப்பட் டுள்ளது. இவரும் வேதவியாசரும் ஒருவரோ வேறோ எனச் சிலர் சந்தேகிக்கின்றார்கள். இந்நூலும், எக்காலத்துப் பிறந்தது என்பதும் தெரியவில்லை! நம் சங்கநூல்கள் காலத்தும் மாணிக்கவாசகர் திருமூலர் ஔவையார் முதலானவர்கள் காலத்தும் இருந்திருப்பதாகத் தெரியவில்லை. இந்நூலில் ஒவ்வொரு சூத்திரங்களிலும், உபநிஷத் வாக்கியத்தை யுதகரித்து அதற்குப் பிறர் கூறும் அநர்த்தத்தைத் தவிர்த்து உண்மையபிப்பிராயம் கூறிப்போகும். அதனாலுமே அதற்கு வேதாந்த சூத்திரங்கள் என்றும் ஏற்பட்டது. இந்நூல் அநேக ஆசிரியர்கள் தங்கள் தங்கள் மதத்தினையே வலியுறுத்தியதென்று பாடியம் செய்திருக்கிறார்கள். அதற்கு ஸ்ரீசங்கரபகவத்பாதா சாரியார் ஒரு பாடியஞ் செய்திருக்கின்றார்கள். அது சைவர்கள் சொல்லும் ஏகான்மவாதம் மாயாவாதம் என்னும் நிலையிலேயே நிற்பதாக ஏற்படுகின்றது. சுவமதஸ்தர்கள் அதனையே வேதாந்த மென்றும் அத்வைத மதமென்றும் பரமஹம்ச மதமென்றும் கூறுகின்றார்கள். உலகவழக்கிலும் பெரும்பாலும் அதனையே வேதாந்தமென்றும் கூறுவதுண்டு. ஆனால், ஸ்ரீசங்கரர்சிஷ்ய பரம்பரைகளுக்குள்ளுமே, ஸ்ரீ சங்கரரின்

“சுத்தச்சிவனுரை தானதிற்றோயாமல்
முத்தர்ப்பதப்பொருள் முத்திவித்தாமூலம்
அத்தகைஆன்மா அரனையடைந்தற்றால்
சுத்தச்சிவமாவரே சுத்தசைவரே”.

என்றதின் உண்மையபிப்பிராயம் இன்னதென்று விளங்காது பலர் பலவிதமாகக் கூறுகிறார்கள். தற்காலத்து இவ்வேதாந்த விசாரணை செய்துவரும் ஐரோப்பிய பண்டிதர்களிலும் இவ்வித வேற்றுமை காண்கிறோம். மோக்ஷமூலர் (மாக்ஸ் முல்லர்) அவர்களும், தம் ‘வேதாந்தம்’ என்னும் அரியநூலில் சங்கரரின் அபிப்பிராயம் இன்னதெனக் காட்டி, அவருக்குப்பின் வந்தோர் அம்மதத்தைச் சுத்தம் மித்யாவாத மாக்கிவிட்டார்க ளெனவும், அதனாலேயே மற்றவர்கள் அம்மதத்தை பிரச்சன்ன புத்தமதமென்று இழித்தார்களென்றும் காட்டி யிருக்கிறார். இந்நூல்களை யாதாரமாகக் கொண்டொழுகிவரும் நூல்கள் பஞ்சதசி, கைவல்யம், ஞானவாசிட்டம் (குரு ஞானவாசிட்டமல்ல) முதலிய நூல்களாம். ஆக இவ்விதமான வேதாந்த

நூல்களை நாம் அநுசரியாவிடில், உண்மை வேதாந்தத்தை இகழ்ந்ததாக மாட்டாது. ஆயின், வேதாந்த சூத்திரத்துக்கு ஸ்ரீ கண்டசிவமும் ஒருபாடியம் இயற்றி உள்ளார்கள். இப்பொழுதுள்ள பாடியங்களில் இது புராதனமானது. மற்றைய வெல்லாம் இதற்குப் பிற்பட்டவைகளேயாம். இதன் உண்மை சங்கர விஜயத்தினாலேயே காணலாம். இந்தச் சைவபாடியம் செய்தவரின் கருத்து சூத்திரங்கள் சிவாத்துவித சைவத்தையே உணர்த்தி நின்ற தென்பது. யாமும் அச்சூத்திரங்களையும், ஆங்கிலேயத்துள்ள எல்லாப் பாடியங்களையும் படித்துப் பார்த்ததில், ஸ்ரீகண்டசிவத்தின் அபிப்பிராயமே சூத்திரங்களாற் போந்த தென்பதும் விளங்குகிறது. சங்கர பாஷ்யத்தையும் இராமனுஜ பாஷ்யத்தையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த டாக்டர் தீபா என்ற பெரியோரின் அபிப்பிராயமும் இதற்கு ஒத்தே வருகின்றது. ஆயின் இந்த வேதாந்த சூத்திரம் நம்மவர்களிற் சிலர் அது ஏகான்மவாதத்தை நிலையுறுத்துவதாக எண்ணி ஒதுக்குகின்றார்கள். சங்கரர் முதலிய மகான்கள் சிலர் அப்படியே அதனைக் கொண்டதையும் கண்டோம்; ஆயின் அதன் உண்மைக் கருத்து, ஸ்ரீ கண்டசிவமும், டாக்டர் தீபாவும் கூறியபடியும், எம்விசாரணைக்கு எட்டியபடியும், சிவனும் சீவனும் வேறு என்பதே. ஆகவே, உண்மையில் பலகலையாகமம் வேத வேதாந்தங்களின் கருத்து, சிவத்தையும், சீவனையும் அவர்களுக்குள்ள பேதத்தையும், அபேதமாகும் முறையினையும், பின்னிற்கு நிலையினையும் தெரித்து நிற்கின்றதென விளங்கும். நமது ஸ்ரீ கண்டசிவமும் அவருக்குப் பின் வந்தோராகிய அரதத்த சிவாசாரியர், அப்பையதீஷிதர் அவர்களும் தற்காலத்து ஸ்ரீ காசிவாசி செந்திநாதய்யர் அவர்களும் காட்டிய வண்ணம், வேதவேதாந்தங்களில் ஆன்மா, பரமான்மா, அமிர்தம், சத்து, சிவம், ஹரன், ருத்ரன் முதலிய பதங்கள் பரியாய பதங்களாய் உபயோகிக்கப்பட்டுப் பரம் பொருளாகிய பரம சிவத்தைக் குறிக்கும். உபநிட தங்களில் ஆன்மா என்னும் பதம் சீவான்மா, சிவம் என்னும் இரண்டு பொருளையும் உணர்த்திவரும் பிரயோகங்கள் காணப்படும். ஏகான்மவாத நூல்களிலேயே, சிவன் ஹரன் முதலிய பிரமத்தின் நாமங்களை விட்டு ஆன்மா, பிரமம் என்னும் நாமங்களே உபயோகிக்கப்பட்டு வருகிறது.

இன்னொரு விஷயத்தை மட்டும் குறித்தபின் இவ்வியாசத்தை முடிவு செய்கின்றோம். பகவத்கீதையானது மகாபாரத மென்னும் இதிகாசத்தின் ஒரு பாகமாகி எல்லோராலும் அங்கீகரிக்கக் கூடிய நூலேயாம். ஆகின் சைவர்களிற் சிலர், அதை நிராகரித்தது மற்றப் புறச்சமயத்தவர்கள் அதனை அதிகமாப் பாராட்டி, அதனை வேறு விதமாய்ச் செய்வதினால் தான். யாம் அதனை ஓதியுணர்ந்தமட்டில் அது சுத்தசைவ நூலாகக் கொண்டோம். ஸ்ரீ கண்ணபிரான் சம்பந்தப்பட்ட மட்டில் பாஞ்சராத்திரிகள் அவரைப் பரம் பொருள் என்று கொள்ளுகின்றார்கள் என்பதிற் சந்தேக மில்லை. ஏகான்ம வாதிகளாகிய வேதாந்திகள், எல்லாம் பரமென்று நினைப்பதால், ஸ்ரீ கண்ணனையும் சாமான்ய பரமாகக் கொள்வதில் விசேஷ மில்லை. ஆயின் சித்தாந்திகள் கொள்ளுவது அவ்வித மன்று. சிவ ஞானயோகிகள் கூறியது வேதாந்திகள் கூறுவது போல்வ தொன்றன்று. ஸ்ரீ கண்ணபிரான் சிவோகம் பாவனையின் முதிர்ந்து, சிவனே தானெனக்கொண்டு குருமுகமாய் நின்று அருச்சுனனுக்கு உணர்த்திய சீவமுக்தன் என்பதே சிவஞான யோகிகள் கருத்து. இதனை முதல்முதல் சுட்டிக்காட்டியவர் ஸ்ரீ கண்டசிவம். இதனையவர் பாஷியம், 1.1.31. கீழ்க் காண்க.

இதனை விரித்து ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதர் சிவாதித் தமணிதீபிகையிலும் கூறியுள்ளார்கள். அங்குக் கண்டு தெளிக.

> 'சித்தாந்தம்' இதழ் ஆண்டு உறுப்பினர் கட்டணம் திசம்பர்த் திங்களுடன் நிறைவு பெறுவதால் ஆண்டு உறுப்பினர் கட்டணத்தைப் புதுப்பிக்குமாறும் ஆயுள் உறுப்பினர் கட்டணம் அமைத்துச் சிறப்பிக்கு மாறும் கேட்டுக் கொள்ளப் பெறுகிறது.
>
> – ஆசிரியர்

இராமாயணம், மகாபாரதம் தமிழர் காவியமே

கலைமாமணி, டாக்டர் சேலம் எஸ். ஜெயலட்சுமி
கலையியல் அறிவுரைஞர், இசைக்கல்லூரிகள்

திராவிடக் கழகம் தோன்றியபோது இந்து கலாச்சாரம் என்பது வட இந்தியர்களால், பிராமணர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்று எண்ணினார்கள். வடமொழியை வெறுத்தனர். வெளிநாட்டு அறிஞர்களும் இந்தியப் பண்பாட்டிற்கு வடமொழி வேதங்களும் (அதாவது இப்போது நமக்குக் கிடைப்பது), வடமொழியும், ஆரியர்களுமே காரணம் என்று எண்ணுகின்றனர். ஏனெனில் 19 ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் தோன்றிய மாக்ஸ்முல்லர் என்ற பேரறிஞரும் மற்றும் ஆசிரியர்களும் வடமொழியில் உள்ள அத்தனை நூல்களையும் ஆங்கிலத்திலும் ஜெர்மன் மொழியிலும் மொழிபெயர்த்து வைத்தனர். இந்தத் தகவல்கள்தான் உலகில் ஆராய்ச்சியாளர்களுக்கு கிடைக்கின்றன. கிறிஸ்துவுக்கு முன் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த திராவிட நாகரீகத்தைப் பற்றி உலகம் இன்னும் அறியவில்லை. உலகத் தமிழ் மாநாடுகளை உருவாக்கிய சிற்பி தவத்திரு தனிநாயக அடிகளார் அவர்கள், தமிழுக்கு ஒரு மாக்ஸ்முல்லர் கிடைக்கவில்லையே என்று வருந்திக் கூறினார். உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றபின் உலகத்து வரலாற்று ஆசிரியர்கள் பல கோணங்களிலிருந்து தமிழ் மொழியை ஆராயலாயினர். 'இவள் என்று பிறந்தவளோ' என்று தமிழ்த்தாயின் வேர்களைக் கண்டுபிடிக்க முடியாது திகைக்கின்றனர். அவர்களுடைய ஆய்வு அறிக்கைகள் சிலவற்றை இங்கு காண்போம்.

ஆரியர்களுக்கு முற்பட்ட வரலாறுகள் (Pre-Aryan)

'கதைகளும், புராணங்களும், கடவுளர்களும்' இந்தியாவில் ஆரியர் வருகைக்கு முன்னரே (கி.மு. 1500) இருந்தன. புராணங்களில் காணப்படும் கடவுளர்கள், மாவீரர்கள், கதாபாத்திரங்கள் ஆரியர்களால் தக்கவிதத்தில் மாற்றப்பட்டு வடமொழியில் அதுவே முதல்நூல் போல் கொண்டுவரப்பட்டுள்ளது. இராமாயண காவியம் மூன்று காதைகளாக உள்ளன. அயோத்தியில் சதி வேலை, இராமனை நாடுகடத்தியது, சீதையை அபகரித்துச் சென்றது, இராமன் அவளை மீட்டது, வானரங்களின் கதைகள் ஆகியவை இதில் அடங்கியுள்ளன. இது இந்தியாவின் கிழக்குப் பகுதியிலே ஆஸ்டிரிக் பின்னணியில் நடந்ததாகத் தெரிகிறது. பின்னர் அதுவே இந்திய நாட்டின் சரித்திரமாக 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரீகமாக மிக நுட்பமான முறையில்

காவியமாகப் புனையப்பட்டது. மகாபாரதக் கதை இந்தியாவின் மேற்குப் பகுதியிலே, புராணங்கள், மரபுகள், வரலாறு இவற்றைக் கலந்து தொகுத்து ஆரியர்களின் தலைமையில் ஒரு புதிய பாரதத்தை உருவாக்கியதுபோல் செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள வேதத்திற்கு முற்பட்ட (Pre-Vedic) கதைகளும், புராணங்களும் அரசு வம்சாவளிகளும் உண்மையில் ஆரியர் வருகைக்கு முன்னரே அதாவது திராவிடர் வரலாறாக இருந்துள்ளது என்று தெரிகிறது. ஆரியருக்கு முன்பே இருந்த வரலாறுகள் ஆரிய மொழியில்கொண்டு வரப்பட்டன (The Vedic Age Ed. by R.C. Majumdar, Bharathiya Vidya Bhavan).

சுனித் குமார் சட்டர்ஜி என்ற வங்காள வரலாற்று ஆசிரியர் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம். இந்தியப் பண்பாட்டில் 75 சதவீதம் திராவிடம்தான் என்றும், அந்த நாகரீகம்தான் இந்தியா முழுவதும் பரந்து விரிந்திருந்தது என்றும் கூறுகிறார்.

'திராவிடப் பண்பாடு ஒரு காலத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ மத்திய இந்தியா, வட இந்தியா, மேற்கு இந்தியா, ஏன் கிழக்கிலும் கூட, பரந்து விரிந்தது என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. பாலுசிஸ்தானத்தில் திராவிடத்தின் கூறாகிய 'ப்ராஹுய்' மொழி வழக்கு உள்ளது. தற்போது அது ஒரு சிறு பகுதியேயாயினும் ஒரு காலத்தில் மிக விரிந்த திராவிடப் பண்பாடாக பலுசிஸ்தான், சிந்து, இராஜபுதனம், மால்வா, மேலும் தற்போதைய மராட்டியப் பகுதி தென்னிந்திய திராவிட நாடுகள். இவை மட்டுமின்றி வடமேற்கில் பஞ்சாப், கங்கை சமவெளி, மேலும் ஆப்கானிஸ்தான் முதல் ஈரான் வரை எங்கும் பரந்திருந்தது என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன (The Vedic Age Race Movements and Pre-historic culture - By S.K. Chattergi P. 168)

இந்தியப் பண்பாட்டிற்கு ஆரியர்களே காரணம் என்ற எண்ணம் உலகெங்கும் நிறைந்திருந்தது. சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் கிழக்குப் பஞ்சாபில் சிந்துவெளி நாகரீகம் (Indus Valley Civilisation) வெளிப்பட்டபோது அந்தக் கருத்து தகர்த்தெறியப்பட்டது. சிந்துவெளி நாகரீகம் கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது. அப்போது ஆரியர்களைப் பற்றிய எந்த அறிமுகமும் கிடையாது. இராமாயணம், மகாபாரதம் போன்ற மகத்தான வரலாறுகள் நடந்து இன்றைக்கு கி.மு. 10000 ஆண்டுகள் ஆகியிருக்கலாம். இராமாயண காலத்தில் பாண்டிய அரசன் இருந்தான். கபாடபுரம் என்ற தலைநகரில் பாண்டிய அரசனின் மாளிகை தங்கமயமாக இருந்தது என்று வால்மீகி இராமாயணத்தில்

வருகிறது. சேரன் பெருஞ்சோற்று உதியன் என்பான் ஐவரும், நூற்றுவருமாகச் சண்டையிட்ட பஞ்சபாண்டவர், கௌரவர் இருபக்கத்து யுத்த வீரர்களுக்கும் உணவு அளித்தான் என்று சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ளது. அனுமன் கதை குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்ற கொள்கைக்கு ஏற்றதாய் உள்ளது. அரக்கன் என்பவன் கடும் தவமியற்றி ஆண்டவனிடமிருந்து வரங்களைப் பெறுவான். ஆனால் வரங்களைப் பெற்றவுடன் தானே கடவுள் என்று இறுமாந்து அக்கிரமங்களைச் செய்வான். புராணங்களில் பல தத்துவ உண்மைகள் உள்ளன. அவற்றைச் சரியான முறையில் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

தமிழ் மொழியைப் போன்று அன்றும், இன்றும், என்றும் இருக்கக்கூடிய மொழி எதுவுமில்லை. தொல் மரபாகிய இந்த மொழியும், மரபும் என்றுமே அழியாதவை. தமிழ் மொழியின் பெருமையைப் பிற நாட்டினர் எவ்விதம் போற்றுகின்றனர் என்பதை நாம் அறிய வேண்டியது மிக மிக அவசியம்.

தமிழ் மொழியில் உள்ள அரிய செய்திகள் அதாவது சங்க காலத்து வரலாறுகள், நமது திருமுறைகள் ஆகியவைகளை விஞ்ஞான முறையில் விளக்கிப் பல நூல்களைப் பிற மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும். வடமொழி நூல்கள் ஆங்கிலத்தில் இருப்பதால் உலகம் முழுவதும் பரவியுள்ளது. நாம் கிணற்றுத் தவளைகளைப் போல் நம்மிடையே மட்டும் பேசிக் கொண்டிருக்கிறோம்.

இராமலிங்க சுவாமிகள் இராமகிருஷ்ண பரமஹம்சரின் காலத்தவர், சுப்பிரமணிய பாரதியார் இரவீந்திரநாத் தாகூர் காலத்தில் இருந்தவர். வடநாட்டினர் உலகம் முழுவதும் புகழ்பெற்றிருக்க நம் தமிழ்நாட்டில் பிறந்தவர்கள் அவ்வளவு பிரபலமடையவில்லை. காரணம் நாம் வெளிநாடுகளுக்குச் செல்வதில்லை. அங்கு சென்றால்தான் நாம் தகுந்த மதிப்பைப் பெறுவோம். நம்முடைய பெருமை நமக்கே தெரியும்.

வடமொழியை நாம் வெறுக்க வேண்டியதில்லை. நம்மிடம் இருக்கும் உண்மைப் பொருள்களை அறியாததால் வடமொழியை மேம்பட்டது என்று நினைக்கிறார்கள். நாம் உண்மைகளை வெளிக்கொண்டுவந்தால் வடமொழிக்கும், ஆரியர்களுக்கும் வெகு காலம் முன்னரே இந்தியப் பண்பாடு சிறப்புற்று விளங்கியது என்பதை அனைவரும் அறிவார்கள்.

கண்ணப்ப நாயனார் புராணத்தில் வழிபாட்டு நெறிமுறைகள்

பேராசிரியர் முனைவர் சரளா இராசகோபாலன்

தமிழ்நாட்டில் இறைவனை இருவழிகளில் வழிபட்டனர். அவை 1. விதிநெறி. 2. பக்தி நெறி. அர்ச்சனை, அபிடேகம், அலங்காரம், வழிபடுமுறை என்பவற்றை அவ்வவற்றிற்குரிய மந்திரங்களைச் சொல்லி வழிபடுதல் விதிநெறியாகும். ஒவ்வொரு செயலையும் என்னென்ன மந்திரங்களைச் சொல்லி எவ்வாறு செய்ய வேண்டும் என்று ஆகம சாத்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளனவோ அந்த முறையில் சிறிதும் வழுவாமல் பூசனை செய்வது விதி வழிபாடாகும். இவ்வழிபாட்டில் செய்யப்படும் அல்லது கூட்டுமுறைகளுக்கும் உச்சரிக்கப்படும் மந்திரங்களுக்கும் முதன்மை தரப்படும். **இயந்திரத்தனமாகச் செய்யப்படும் வழிபாடு என்று இதனைக் கூறலாம்.** இதில் உணர்வு வெளிப்பாடு இல்லை. அன்பு இல்லை. பக்தன் இறைமையுடன் ஒன்றும் நிலை இல்லை. புறத்தூய்மைக்குக் கொடுக்கப்படும் முதன்மை அகத்தூய்மைக்குக் கொடுக்கப்படுவது இல்லை. வேதம், ஆறங்கம், வேள்வி ஆகியவற்றிற்கு முதன்மை தரப்பட்டது.

பக்தி நெறியில், சடங்குகட்கு முதன்மை இல்லை. மனத்திற்கும் உணர்வுக்கும் முதன்மை தரப்படும். இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையே அன்பு மட்டுமே சிறப்பிடம் பெறும். **கிரியைக்கு இடம் கிடையாது.** சாதி வேறுபாடு இல்லாமல் அன்புடையோர் எல்லாம் இந்நெறியைப் பின்பற்றலாம் 'அன்புடையார் எல்லாமுடையார்' என்பதற்கு நிலைக்களமாவது. அவரவர்களின் மொழியில் பேசி, பாடி வழிபடலாம். அன்பு நெறியை மேற்கொண்டவர்களின் நிலையைச் சேக்கிழார் நாவுக்கரசரின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

"சிந்தை இடையறா அன்பும் திருமேனி தனில்அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் கைஉழ வாரப்படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத் தரசும் எதிர்வந் தணைய"

(திருஞானசம்பந்தர் புராணம் : 270)

என்று அன்பின் திருவுருவநிலை கூறப்படுகிறது. நாவுக்கரசர் தேவாரத்தில் இருவேறு நெறிகளின் தன்மையை வேற்றுமையை – உயர்வை ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்

"வேதம் ஓதில் என்? வேள்விகள் செய்கில் என்?
நீதி நூல் பலநித்தல் பயிற்றில் என்?
ஓதி அங்கம் ஓர் ஆறும் உணரில் என்?
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே"

(தேவாரம் 5:99–4)

என்று பாடுகிறார். விதி நெறியினும் அன்பு நெறியே உயர்ந்தது என நிலைநாட்டுகிறார்.

"பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே"

(தேவாரம் 5:90–9)

என்று நகுகிறார்

அன்பு நெறிக்கு முதன் முதலில் அழுத்தம் தந்து சிறப்பித்து, அதுவே சிறந்தது, உயிர் நாடியானது என்பதைக் கூறியவர் சம்பந்தரேயாவார். அவருக்குப் பின் வந்த நாயன்மார்களும் அன்பு நெறியையே போற்றினர். விதி நெறியால் ஊன்றியவர்களின் மனமோ அன்பு நெறியில் நிலை கொள்ளவில்லை. அதனால் திருஞானசம்பந்தர் இரண்டையும் ஒன்றாக்க முனைந்தார். விதி நெறியில் நிற்பவரின் மனத்தில் அன்பு இல்லையானால் அவ்வழிபாடு ஆடம்பர வழிபாடு ஆகுமே தவிர உண்மை வழிபாடு ஆகாது. சேக்கிழார் கண்ணப்பர் வரலாற்றில் இரண்டு வழிபாட்டு நெறிகளையும் காட்டி அன்பு நெறியே சிறந்தது என்று உணர்த்துகிறார்.

<u>சிவகோசரியாரின் வழிபாட்டு நெறி :</u>

சிவகோசரியாரின் வழிபாட்டு நெறிமுறையைக் கண்ணப்பர் அறிய வாய்ப்பில்லை. இது அவருடைய கன்னிவேட்டை. குடுமித் தேவரைக் கண்ட கண்ணப்பர் தன் நண்பன் திண்ணனிடம்,

"பச்சிலை யோடு பூவும் பறித்திட்டு நீரும் வார்த்து
மச்சிது செய்தார் யாரோ?

என்று வினவுகிறார். நாண்னும்.

"வன்திறல் உந்தை யோடு மாவேட்டை ஆடிப் பண்டு இக்
குன்றிடை வந்தோ மாகக் குளிர்ந்தநீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி ஊட்டி முன்பு அறைந்து ஓர் பார்ப்பான்
அன்றிது செய்தான் இன்றும் அவன்செய்தது ஆகும் (பெ. 758)

என்று சிவகோசரியாரின் வழிபாட்டு முறையைத்தான் கண்டவாறே கூறினான். சிவகோசரியார் கூறிய மந்திரத்தை ஏதோ அறைந்து என்பது கவனத்திற்கொள்ளற்குரியது. இவ்வழிபாட்டு நெறியறியாத கண்ணப்பர் தானும் பின்பற்ற விரும்பினார்.

"திண்ணனார் திருக்காளத்தி நாயனார்க்கு இனிய செய்கை
எண்ணிய இவைகொலாம் என்று" (759)

தானும் ஆரா அன்புடன் கடைப்பிடிக்க விரும்பினார். கண்ணப்பர் இறைவனுக்கு இறைச்சியைப் படைத்து வழிபட்டு மீண்டும் வேட்டையாடச் சென்றபோது சிவகோசரியார் வழிபாடியற்ற வந்தார்.

"எய்தியசீர் ஆகமத்தில் இயம்பியபூ சனைக்கு ஏற்பக்
கொய்தமல ரும்புனலும் முதலான கொண்டு"

அணைந்தார். சிந்தை நியமத்தோடு சென்றார் இறைவன் திருமுன்பு,

"வெந்த இறைச்சி யும்எலும்பும் கண்டு அகல மிதித்து ஓடி
இந்தஅனு சிதம்கெட்டேன் யார் செய்தார்"

என்று அழிந்தார். இறைச்சி எலும்புடன் இலையும் செருப்பு அடியும் நாய் அடியும் திருஅலகால் மாற்றிய பின் விருப்பினொடும் திருமுகலிப் புனலில் மூழ்கினார்.

"பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரம் ஆம் செயல் புரிந்து
தொழுதுபெறு வனகொண்டு தூயபூ சனை தொடங்கி
வழுவில்திரு மஞ்சனமே முதலாக வரும்பூசை
முழுதுமுறை மையின் முடித்து முதல்வனார் கழல் பணிந்தார்

பணிந்தெழுந்து தனிமுதலாம் பரனென்று பன்முறையால்
துணிந்தமறை மொழியாலே துதிசெய்து"

(788, 789)

இறைவனிடம் விடைகொண்டு நீங்கினார். இவ்வாறு ஆகம விதியால் ஆனமுறையில் அர்ச்சனை செய்து அந்நெறி ஒழுகினார் என்று சிவகோசரியாரின் ஆகமநெறிமுறையை – விதி. வழிபாட்டு நெறிமுறையைக் கூறியுள்ளார் சேக்கிழார்.

<u>கண்ணப்பரின் அன்புநெறி :</u>

நாவுக்கரசர் ஒரு பக்தனுடைய வளர்ச்சியைத் தொடக்கத்திலிருந்து முடிவுவரை ஒரே பாடலில் கூறியுள்ளார்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பேர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

(தேவாரம் 6:25–7)

என்னும் பாடலின் நுண்மையான விளக்கமாகவே கண்ணப்பரின் பக்திநெறியைப் பாடிச்சென்றார் சேக்கிழார். குடுமித்தேவரின் பெயரைக் கண்ணப்பர் நாணன்மூலம் கேட்டதும் அவர், தன்னை மறந்தார். அன்னையையும் அத்தனையும் மறந்தார். தன் நாமம் கெட்டார். இறைவனையே நினைந்தார். நாணன், காடனிடம் கண்ணப்பரைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"அங்கிவன் மலையில் தேவர் தம்மைக்கண்டு அணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும்பு என்ன நீங்கான்
இங்கும் அத் தேவர் தின்ன இறைச்சி கொண்டு ஏகப்போந்தான்
நங்குலத் தலைமை விட்டான் நலப்பட்டான் தேவர்க்கு என்றான் (116)

என்பதுதான் அறநெறித் தொண்டாகும்.

சமய உலகத்தில், இறைவனை அடையும் எந்தத் தகுதியும் இல்லாமல் அன்பை மட்டுமே தகுதியாகக் கொண்டு உயர்ந்த இரு வேடர்களைக் காண முடிகிறது. சிவபெருமானிடம் அன்பு கொண்ட

கண்ணப்பர் காட்டில் உறைந்தவர், வேடர். இறைவனுக்கு இறைச்சியைத் தின்னக் கொடுத்தவர். இறைவனால் கண்ணப்பர் என அழைக்கப் பெற்றவர். ஆறே நாள் வழிபாட்டில் இறைவன்பால் இருக்கப்பெற்ற பெருமையர்.

இராமனிடம் அன்பு கொண்ட குகன் தன்னலம் இல்லாத் தகையன். அன்புக்காகவே இராமனை வழிபட்டவன். கங்கைக் கரையில் உறைந்தவன். மீன் உணவை இராமனுக்குக் கொடுக்க விரும்பியவன். வைணவர்களால் போற்றப்பெறும் உயர்நிலையடைந்தவன்.

நாவுக்கரசரின் பாட்டில் அமைந்துள்ள அன்பு வளர்ச்சியைக் கண்ணப்பரின் வாழ்க்கையில் காணமுடிகிறது. இறைவனைப் பற்றியும் இறைவழிபாட்டைப் பற்றியும் ஒன்றுமே தெரியாதவர் கண்ணப்பர். வேட்டைக்குச் சென்ற அவர், ஒரு பன்றியைத் துரத்திச் சென்று இறுதியில் அதனைக் கொன்ற இடத்தில் இருந்து மலையைக் கண்டு அது என்னவென்று தம்முடன் வந்த நாணனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். எந்த ஒரு குறிக்கோளும் இல்லாமல் வேடிக்கையாக ஏறத்தொடங்கினார். மலைமேல் ஏறிய அவர் இறைவனாம் அன்பு மலையின் படிநிலைகளில் ஏறத்தொடங்கினார்.

"ஆவதென் இதனைக் கண்டிங் கணைதொறும் என்மேற் பாரம்
போவதொன் றுளது போலும் ஆசையும் பொங்கி மேன்மேல்
மேவிய நெஞ்சும் வேறோர் விருப்புற விரையா நிற்கும்
தேவரங் கிருப்ப தெங்கே போகென்றார் திண்ண னார்தாம்"

(பெ.பு 746)

என்று அன்பின் தொடக்கம் எடுத்துரைக்கப்படுகிறது. கல்வியறிவில்லாத ஒருவருக்கு உள்ளுணர்வால் உண்டாகும் பக்திநிலையாகும் இது. தூக்குவதற்குத் திண்மையாக இருந்ததால் திண்ணப்பராயிருந்த அவருடைய உடலின் பாரம் நீங்கியது. இறைவரால் கண்ணப்பர் ஆகப்போகிறார் அல்லவா? இறைமையை அறியா அவருக்கு இறைவனைக் காணும் ஆசை மேலும் மேலும் பொங்கியது. கால்களுக்கு முன்னால் நெஞ்சம் இறைவனை அடைய விரைந்தது. மன்பெரு காதல் கூர, என்பு நெக்குருகி உள்ளத்தெழு பெருவேட்கையோடு மலையில் ஏறினார். மேலே சென்று குடுமித் தேவரைக் கண்ட மாத்திரத்தில்

'பொங்கிய ஒளியின் நிழல் பொருவில் அன்புருவம் ஆனார். தாயாக மாறினார். வேகமாக ஓடிச்சென்று தழுவினார். மோந்தார். அன்பின் வயப்பட்ட அவருடைய நிலையைச் சேக்கிழார்,

"நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கண்ணீர் அருவி பாய
அடியனேற்கு இவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ என்று
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற" (755)

நின்றார். வேட்டுவச் சாதியார் போல் கரடியும் வேங்கையும் திரிகின்ற கானத்தில் துணையாய் ஒருவருமில்லாமல் இருக்கும் நிலைகண்டு நைந்தார். இறைவனைப் பாதுகாக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். இறைவனிடத்தில் பச்சிலையொடு பூவும் நீரும் இருப்பதைக் கண்டு நாணனிடம் காரணம் கேட்டு அறிந்தார். இவையெல்லாம் இறைவனுக்கு இனிய செய்கை என உணர்ந்தார். சிவகோசரியார் செய்தது போன்று தானும் வழிபட நினைத்தார். சிவகோசரியார் செய்யாததையும் அன்பினால் செய்தார். தன் தாய் தனக்கு ஊட்ட, பசியாறியது நினைவுக்கு வந்தது. இறைவனின் பசிநீக்க நினைத்தார். தாய் தன்னைக் காத்தது போன்று இறைவனைக் காக்க விரும்பினார். சிவகோசரியாரிடம் இல்லாத அன்புத் தூய்மை நிலை இது.

இறைவனின் பசியைப் போக்க நல்ல இறைச்சி தேவை என நினைத்தார். இறைவனை விட்டுப் பிரிந்தால் அவருக்கு ஊறு நேருமோ என அஞ்சினார்.

"போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலின் நோக்கி நிற்பர் கன்றகல் புனிற்றாப் போல்வர்" (761)

என்று தாய்மை நிலையில் தவித்தார். தான் வேட்டையாடிய பன்றியின் இறைச்சியைப் பக்குவப்படுத்தி, காத்திருந்த நண்பர்களை அடைந்தார். ஆனால் நண்பர்களின் முகத்தை நோக்கார். அவர்கள் தன் நண்பர்கள் என்பதையும் மறந்தார். பன்றியின் கொழுந்தசையைக் கோத்து, காய்ச்சி, பதமாக வேகவைத்து, சுவையானதா என்பது அறிய, தன் வாயிலிட்டு அதுக்கிப் பார்த்து, இனியவற்றை மட்டும் தேக்கிலையில் எடுத்துக் கொண்டார். குடுமித்தேவரின் பசியை நீக்க வேண்டும் என்ற ஒரே

எண்ணத்தில் இருந்தார். தம் பசியை மறந்தார். இறைவன் பசியையே நினைத்தார். இவர் நிலை கண்ட நாணன்,

"அங்கிவன் மலையில் தேவர் தம்மைக்கண் டணைத்துக் கொண்டு
வங்கினைப் பற்றிப் போகா வல்லுடும் பென்ன நீங்கான்" (716)

என்றான். கண்ணப்பர் நண்பர்கள் பிரிந்ததையும் அறியார். இறைவனுக்குத் திருமஞ்சனமாட்ட, பொன் முகலியாற்றின் நீரை வாயில் கொண்டார். கொய்த மலர்களைத் தன் தலையில் சூடிக்கொண்டார். இறைவன் பசித்திருப்பார் என விரைந்தார். ஏற்கெனவே இருந்த மலரைத் தன் கால் செருப்பால் மாற்றினார். மஞ்சன நீரை, விளைத்த அன்பு உமிழ்வார்போல் விமலனார் முடிமேல் விட்டார். தன் முடியில் இருந்த மலரை முடிமிசை வணங்கிச் சாத்தினார், ஊனை எதிரில் வைத்து அமுது செய்தருளும் என வேண்டினார்.

ஆறுநாட்கள் வரை இந்நிலை தொடர்ந்தது. ஆறு நாட்களும் திண்ணனார் தான் நீராடாமல் இறைவனை நீராட்டினார். தான் உண்ணாமல் இறைவனுக்கு ஊட்டினார். தான் உறங்காமல் இறைவனைக் காத்தார்.

சிவகோசரியார் ஆகம முறைப்படி வழிபாடு செய்தார். அவர் இறைவனுக்கு உணவு படைக்கவில்லை. தான் உண்டார். அவர் உறங்காமல் இறைவனைக் காக்கவில்லை. அவ்விருவரின் வழிபாட்டில் எவருடைய வழிபாடு சிறந்தது, எவருடைய வழிபாட்டை இறைவன் விரும்பினான் என்று இரு பாடல்களில் சேக்கிழார் சிவகோசரியார் கனவில் வந்து இறைவன் கூறுவதாக அமைத்துள்ளார்.

"அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பென்றும்
அவனுடைய அறிவெல்லாம் நமையறியும் அறிவென்றும்
அவனுடைய செயலெல்லாம் நமக்கினிய வாமென்றும்
அவனுடைய நிலை இவ்வாறு அறிநீஎன்றருள் செய்தார்"

மேலும் அவன் இட்ட மலரை நீ நீக்குகிறாய் ஆனால் அவன் செருப்படி, முருகன் அடியாக எனக்கு இனிக்கிறது.

"விருப்பு உறும் அன்பு எனும் வெள்ளத்தால் பெருகிற்று என வீழ்ந்த

செருப்பு அடி அவ் விளம்பருவச் சேய் அடியின் சிறப்புடைத்து" (807)

என்றான் இறைவன். இறைவன் முன் செருப்புடன் செல்லக்கூடாது என்பது ஆகமவிதி, கண்ணப்பரோ செருப்புடன் சென்றார். செருப்புக் காலால் இறைவன்மேல் உள்ள மலரை மாற்றினார். இறைவனோ ஆகம விதியினும் அன்பிற்கு முதலிடம் தந்தான்.

இறைவன் மேல் எச்சில்படக் கூடாது என்பது ஆகம விதி. திருநீல நக்கரின் மனைவியார் இறைவன் மீது சிலந்திப் பூச்சி விழுந்து இங்கும் அங்கும் ஊர்வதைக் கண்டு தன் வாயால் ஊதிப் போக்கினார். இதைச் சேக்கிழார்,

"எழுந்த அச்சமொடு இளங்குழ வியில் விழும் சிலம்பி
ஒழிந்து நீங்கிட ஊதி முன் துமிப்பவர் போலப்
பொழிந்த அன்பினால் ஊதிமேல் துமிந்தனர் போக".
(திருநீல நக்கர் 12)

என்றார். குழந்தையின் மேல் விழுந்த சிலந்தியைத்தாய் ஊதுவது போன்று தாயன்புடைய அம்மையார் இறைவனாகிய குழந்தைமீது சிலந்தி விழுந்ததாக நினைத்து ஊதினார். ஆகம நெறியில் வழிபாடு செய்யும் திருநீலநக்கர் இது அனுசிதம் என்று மனைவியைத் துறந்தார். நாயனாரின் கனவில் அம்மையார் ஊதிய இடம் தவிர மற்ற இடங்களில் இருந்த சிலம்பியின் கொப்புளங்களைக் காட்டினான் இறைவன். விதிவழியே பூசனை செய்த திருநீலநக்கரை விட அம்மையின் அன்பு வழியே சிறந்தது என இறைவனே எடுத்துக்காட்டினான். கண்ணப்ப நாயனார் புராணத்திலும் சிவகோசரியாரின் கனவில் வந்த இறைவன், கண்ணப்பரின் வாய் உமிழ்ந்த மஞ்சன நீராட்டு நீர், கங்கை நீரினும் புனிதமானது என்றான்.

"உருகிய அன்பு ஒழிவுஇன்றி நிறைந்த அவன் உரு என்னும்
பெருகிபகொள் கலமுகத்தில் பிறங்கி இனிது ஒழுகுதலால்
ஒருமுனிவன் செவிஉமிழும் உயர்கங்கை முதல் தீர்த்தப்
பொருபுனலின் எனக்கு அவன்தன் வாய்உமிழும் புனல்புனிதம்
(808)

என்றான்.

இறைவனுக்கு அர்ச்சிக்கப்படும் மலர் புனிதமானது. அதை முகரவும் கூடாது என்பது ஆகமவிதி. இறைவனுக்குரிய பூமாலையை ஆண்டாள் சூடியதால் பெரியாழ்வார் இறைவனுக்கு அதைச் சூட்டாமல் வேறு மாலையைச் சூட்டினார். குறுநில மன்னராகிய கழற்சிங்க நாயனாரின் மனைவியார் சிவபூசைக் குரிய பூவை மோந்ததற்காக மூக்கை அறுத்தார் செருத்துணை நாயனார். மன்னவனோ அதைக்கண்டு சினமுறாமல் அம்மலரைத் தொட்ட கையையும் வெட்டினான். ஆகமநெறி அறியாத கண்ணப்ப நாயனார் பூவைத் தலையில் சுமந்து வந்து, தலையிலிருந்து விழ வைத்தார். ஆயினும் அவருடைய அன்புடைமை அறிந்த இறைவனோ அந்தப் பூக்கள் மெய்ம் மலரும் அன்புமேல் விரிந்தனபோல் விழுகின்றன. தேவர்கள் வந்து புனைகின்ற 'எம்மலரும் அவன் தலையால் இருமலர்போல் எனக்கு ஒவ்வா' என்று பெருமையுடன் கூறினான்.

சிவபெருமானுக்கு மாமிசங்களைப் படைத்தல் வைதீகமுறை அன்று. கண்ணப்பர் தான் முன்பு உண்ட மாமிசத்தையே இறைவனுக்குப் படைத்தார். இறைவனுக்கு நைவேத்தியம் செய்தற்கு முன் மற்றவர் உண்ணக்கூடாது எச்சில் படுத்தக்கூடாது என்பது ஆகம முறை. கண்ணப்பர் அன்பு மிகுதியால் இறைச்சியைத் தன் வாயில் இட்டு மென்று சுவை பார்த்து நல்லதையே இறைவனுக்குப் படைத்தார். இறைவனோ மறையோர் வேள்வியில் இட்ட அவியுணவினும் இனியது என்றார்.

"செய்யும் மறை வேள்வியோர் முன்புதரும் திருந்து அவியில்
எரியும் வரிச் சிலையவன்தன் இட்டஊன் எனக்கினிய" (810)

என்னும் பாடல் கண்ணப்பனாரின் அன்பு நிலையைக் காட்டுகிறது.

இறைவனுக்குத் தமிழ்ப் பாக்களால் பூசிப்பதைவிட, வடமொழி வேதங்களையும் மந்திரங்களையும் ஓதுதலே சிறப்பு என்பது ஆகம விதியோர் கருத்து. ஆகம நெறியின்படி வேதம் ஓதாத கண்ணப்பரின் அன்பு மொழியே தனக்கு இனிது என்றான் இறைவன்.

"மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்து ரைக்கும்
இன்ப மொழித் தோத்திரங்கள் மந்திரங்கள் யாவை யினும்
முன்பு இருந்து மற்றவன் தன்முகமலர அகம்நெகிழ
அன்பில் நினைந்து எனையல்லால் அறிவுறா மொழிநல்ல" (811)

என்றான் இறைவன்.

அன்பு நெறியில் எது செய்தாலும் அது எம்பிரானுக்கு ஏற்றதாகும் என்பதைக் கண்ணப்ப நாயனார் புராணம் தெரிவிக்கிறது. விதி நெறியை விட அன்பு நெறியையே இறைவன் ஏற்றுக்கொள்கிறான் என்பதை விளக்குகிறார் சேக்கிழார். அன்பு நெறியில் செல்கின்ற ஒருவனுடைய வளர்ச்சி எவ்வாறு இருக்கும் என்பதையும் விரிவாக விளக்க எழுந்ததே கண்ணப்பர் புராணம். விதிநெறியில் சென்ற சிவ கோசரியார் இறைவனைக் கனவில்தான் காணமுடிந்தது. அவர் முத்தி அடைந்ததாகவும் வரலாறு இல்லை. கண்ணப்பர் ஆறு நாளிலேயே இறைவனைக் கண்டார். முத்தி அடைந்தார். செயற்கரும் செயலால் பெயர் மாற்றமும் பெற்றார். திண்ணனார் பெற்ற பெரும் பேற்றைச் சேக்கிழார்,

> "பேறினி இதன்மேல் உண்டோ பிரான்திருக் கண்ணில் வந்த
> ஊறுகண் டஞ்சித் தங்கண் இடந்தப்ப உதவுங் கையை,
> பிடித்துக்கொண்டு என்வ லத்தில் மாறுஇலாய் நிற்க என்று
> மன்னுபேர் அருள் புரிந்தார்" (834)

என்று பாடினார். பின்னால் தோன்றிய பட்டினத்துப் பிள்ளையும் "நாள் ஆறில் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லேன்" என்று பாடினார்.

கண்ணப்பரின் வழிபாட்டு நெறி உணர்வு வயப்பட்ட தன்னலங்கருதாத தாயன்பு நெறி. இறைவனோடு ஒன்றான அன்பு நெறி. 'தான்' என்பது முற்றிலும் இல்லாத அன்பு நெறி. பயன் கருதாத அன்பு நெறி. கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டாத அன்பு நெறி. சிவகோசரியாரின் ஆகம நெறி அறிவின் வழிப்பட்ட நெறி. வழிவழியாக வரும் நெறி. தான் அன்பு செய்து இறைவனைப் பூசித்து அவன் திருவடியை அடையவேண்டும் என்னும் குறிக்கோளில் பிறந்த நெறி. பயன் வேண்டும் நெறி. அறிவினும் அன்பு ஏற்றமுடையது. ஆதலால் சிவகோசரியாரின் விதிநெறியினும் கண்ணப்பரின் அன்பு நெறியே ஏற்றமுடையதாகிறது.

இரண்டாமாண்டு மார்கழிச் சிந்தனை

இரண்டாம் ஆண்டு மார்கழிச் சிந்தனைத் தொடர் சொற்பொழிவு 16.12.02 முதல் 14.1.03 வரை சைவ சித்தாந்தப் பெருமன்ற வளாகத்தில் காலை 7.30 முதல் 9.00 மணி வரை நடைபெற்றது. முதல் பத்து நாட்கள் திருப்பள்ளி யெழுச்சிப் பாடல் விளக்கம் முனைவர் திருமதி. வெ. கனக சுந்தரம் அவர்களாலும் அடுத்து இருபது நாட்கள் திருவெம்பாவை விளக்கம் சித்தாந்த சரபம் முனைவர் வை. இரத்தின சபாபதி அவர்களாலும் மிகச் சிறந்த முறையில் நடத்தப் பெற்றன.

19.12.02 அன்று திருப்பள்ளி யெழுச்சிப் பாடல்களுக்கு விளக்கவுரை அளித்த பின்பு நால்வர் சிலைக்கும் சிவகாமி அம்மைக்கும் நடராசப் பெருமான் சிலைக்கும் நன்னீராட்டு விழா செந்தமிழ் வேள்விச் சதுரர் திரு. மு. பெ. சத்தியவேல் முருகன் அவர்களால் நடத்தப் பெற்றது. அன்றைய தினம் திரு. கோ. நாகநாதன் அவர்கள் அபிடேகத்திற்கு உண்டான செலவுகளையும் பிரசாதம் வழங்கிய செலவுகளையும் ஏற்றுச் சிறப்பித்தார்கள். மற்றும் மார்கழி மாதம் தொடர் சொற்பொழிவின் போது செல்வி. மு. இரகுபாய், திருமதி. அமுதா மாதவன் ஆகியோர் பிரசாதம் வழங்கினார்கள். 14.01.03. அன்று நிறைவு நாளில். முனைவர் திருமதி. வெ. கனக சுந்தரம் அவர்களால் அன்பர்களுக்குக் கேசரி, பொங்கல் சுண்டல் வழங்கப் பெற்றன.

இரண்டாம் ஆண்டில் மார்கழிச் சிந்தனைத் தொடர் சொற்பொழிவிற்காக அறக்கட்டளை அமைத்தவர்கள் விவரம்.

1.	திரு. G. வெங்கடாசலம், திருவான்மியூர், சென்னை – 41	2000/–
2.	திரு. வை. சிவராசன் சைதாப்பேட்டை, சென்னை – 15	1000/–
3.	திரு. தி. ஜெயபாலன் மேலாளர் பெருமன்றம் தன்மகன் J. பாலாஜி பெயரில்	1000/–
4.	திருமதி க. மீனாட்சி பாண்டிச்சேரி	500/–
5.	திரு. அ. முத்துராம் திருமதி. மு. சிவகமலா	501/–

மற்றும் மார்கழிச் சிந்தனைச் செலவுக்காக அன்பளிப்பு அளித்தவர்கள்

செல்வி மு. இரகுபாய் 200/– திரு. வை. சிவராசன் 100/–
திரு. அருள் சிவசுப்பிரமணியம் 100/–

2002 ஆம் ஆண்டு சேர்ந்த ஆயுள் உறுப்பினர்கள்

திருமிகு புட்டபரதம் (மொரீசியசு)
தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
பேரூராதீனம் பேரூர்,
கோவை – 641010

ட1158
முனைவர் சாரதா நம்பி ஆரூரன்
30, முத்து கிருஷ்ணன் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600 004.

ட1159 திரு. சி. சிவமணி
ப. எண். 581.4. எண். 86
சுப்பிரமணிய முதலி தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை – 600 015

ட1160 திருமதி வ.ரமா
23/1, விச்சூர் முத்தைய்யா
முதலித் தெரு, சூளை,
சென்னை – 112

ட1161 திரு. மு. சதாசிவம்
சிவனகம் 20, (வீட்டு எண்.)
16 (தெரு எண்) பொறிஇயல்
கல்லூரிக் குடியிருப்பு
திருச்சி – 620015

ட1162
திரு. ட பாலசுப்பிரமணியன்
பிளாட் 1079, முனுசாமி சாலை,
கே.கே. நகர்,
சென்னை – 600 078.

ட1163 திரு. ஏ. கிருஷ்ணமூர்த்தி
பிளாட் எண். 5 சத்யம்
23, ரங்கநாதன் தெரு,
கணேஷ்நகர்,
வேளச்சேரி, சென்னை – 42

ட1164 திரு,. எஸ். சோமசுந்தரம்
எச்.37/1, கீதா அப்பார்ட் மெண்ட்ஸ்
குமரன் தெரு,
கலா சேத்திரா காலனி
சென்னை 90

திரு. வை. சிவராசன்
21/9, முதல் தெரு,
ரங்கராஜபுரம், சைதாப்பேட்டை,
சென்னை – 600 015

ட1166 திரு. சு. விசுவநாதன்
66, T.M. மேஸ்திரி தெரு,
S4 Kgeyes Enclave
திருவான்மியூர், சென்னை – 41.

ட1167 திரு. A.R. குழந்தைவேலு
47, A.P.A. ஜுவல்லரி
சின்னக் கடைத்தெரு,
திருச்சி – 620 002

ட1168 திரு. மு. நரேந்திரன்
கண்ணா இல்லம் ம. எண். 56
2, 2ஆவது பிரதான சாலை,
தலைமைச் செயலகக் குடியிருப்பு
ஆதம்பாக்கம் – சென்னை – 88

ட1169 சி. பாலசுப்பிரமணியன்
9, பெருமாத் தெரு,
சிதம்பரம் – 608 001

ட1170 திரு. சோ. முருகன்
61/81, தெற்கு வீதி,
சிதம்பரம் – 608 001

ட1171 திரு. P.V. சம்பந்தன்
54/2, பால்வெல் சாலை,
பரங்கிமலை, சென்னை – 16

ட1172
திரு. G. முத்துகிருஷ்ணன்
14, இந்திரா காந்தி
குறுக்குத் தெரு,
குரோம்பேட்டை, சென்னை – 44

ட1173 திரு. E. இராமச்சந்திரன்
47A, தாமோதரபுரம்
பிரதான சாலை,
அடையாறு, சென்னை – 20

ட1174
திரு. A. கிருஷ்ணமூர்த்தி
நெ. 9, மாசிலாமணி ரோடு,
பாலாஜி நகர், இராயப்பேட்டை,
சென்னை – 14

ட1175
திரு. கணபதி சுப்பிரமணியன்
8, புது எண். 37,
இரண்டாவது அவின்யூ,
அசோக் நகர், சென்னை – 83

ட1176
திரு. து.கு. புருஷோத்தமன்
பு.எண். 8, ப.எண். 7, ஸ்டேட்
பாங்க் ஆபீசர் காலனி
1ஆவது தெரு, பெரம்பூர்
ஹை ரோடு, சென்னை – 12

ட1177 திரு. சு. வீரபாகு
13, முதல்மாடி நெ. 82,
பு.எண். 246, ரங்கராஜபுரம்
முதன்மைச் சாலை,
சென்னை – 600 024

ட1178 திரு. எஸ். லோகநாதன்
பு.எண். 189, ப.எண். 93/2,
முதல் மாடி, தம்புசெட்டித் தெரு,
சென்னை – 600 001.

ட1179 திரு. ப. முருகன்,
எண். 7/15, 19ஆவது
நிழற்சாலை, அசோக் நகர்,
சென்னை – 600 083

ட1180 திரு. V.V. துரைசாமி
5, சுப்பிரமணியம் அவின்யு,
திருவான்மியூர்,
சென்னை – 600 041.

ட 1182
திரு. ஞா. சு. செல்வத்துரை
பு.எண். 1, சீனிவாசா தெரு,
கே.கே. நகர், சென்னை – 600 078,

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க ! நாதன் தாள் வாழ்க !

'தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே.'

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

புதுச்சேரி கிளை

13, சிதம்பரனார் வீதி, செங்கேணியம்மன் நகர், உருளம்பேட்டை,
புதுச்சேரி – 605 005.

✆ : 0413–204944, 203551, 335679, 250793

5.1.03 முதல் அமைக்கப் பெற்ற புதிய செயலவை

கௌரவத் தலைவர்	:	**சிவ. சு. திருநாவுக்கரசு**
தலைவர்	:	**சிவ. ஆ. கந்தசாமி**
துணைத் தலைவர்	:	**சிவ. தங்க. கிருட்டிணராசு** **சிவ. கு. இராசசேகரன்**
செயலர்	:	**சிவ. ஏ. முனிசாமி**
துணைச் செயலர்	:	**சிவ. தங்க இராசகோபால்** **சிவ. வீ. துளசி**
பொருளாளர்	:	**சிவ. கோ. ஆறுமுகம்**
உறுப்பினர்கள்	:	**சிவ.வீ. இலட்சுமணன்** **சிவ. தி. சுந்தரம் வெங்கடாச்சலம்** **சிவ. வ. சண்முகம்** **சிவ. த. சண்முகம்** **சிவ. ச. மாசிலாமணி** **சிவ. த. சுந்தரம்**

Regd. No. TN/Chief PMG 423/2002 SIDDHANTHAM FEBRUARY 2003

LICENCED TO POST WITHOUT PREPAYMENT
...PMC WPP/208

DATE OF POSTING 31.1.2003

If not Delivered Please return to Sender
SAIVA SIDDHANTHA PERUMANRAM
4, Venkatesa Agraharam Road, Mylapore, Chennai - 600 004.

POSTED UNDER PERMIT NO. MA.EC. 16/1981 of RBI

2003 பிப்ரவரித் திங்கள் சிறப்பு நாள்கள்

3.2.2003	அப்பூதியடிகள்
7.2.2003	கலிக்கம்பர்
12.2.2003	கண்ணப்பர்
13.2.2003	திருவாதிரைத் திருநாள்
20.2.2003	எறிபத்தர்
26.2.2003	காரி

குறிப்பு : பிப்ரவரித் திங்களில் வரும் நாயன்மார்களின் குருபூசை விழா 22-2-2003 சனிக்கிழமை மாலை 5.45 மணிக்கு மன்ற அலுவலகத்தில் நடைபெறும். அன்பர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம். *செயலர்*

ஆசிரியர் : முனைவர் வை. இரத்தினசபாபதி
மன்றத்திற்காக வெளியிடுபவர் : சிவத்திரு. சி.வி. சதாநந்தன்
அச்சிடுபவர் : சிவ. வி.ஆர். மயூரப்பிரியா,
ஸ்ரீ கைலாஸ் பிரிண்டர்ஸ்
32, பங்காரு நாயக்கன் தெரு, சென்னை – 2.